# ஐரோப்பாவிலிருந்து படையினருக்கு டாங்கிகள்

(கொழும்பு)

இலங்கை அரசு, அண்மையில் சீனாவிடமிருந்து 'ஜெட்' போர் விமானங்களையும், கிழக்கு ஐரோப்பாவிலிருந்து "ரி-55" ரக டாங்கிகளையும் கொள்முதல் செய்துள்ளது.

## தருவிப்பு

இவற்றின் மூலம் தனது இராணுவப் படைப் பலத்தை

(2-ம் பக்கம் பார்க்க)

விலை ரூபா 5-00

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 33 | திருவள்ளுவர் ஆண்டு 2022 | ஐப்பசி 12 | இதழ்: 259

யாழ்ப்பாணம் | செவ்வாய்க்கிழமை | 29-10-1991

## தமிழ் மக்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம்

(மட்டுநகர்)

மட்டுநகர் மாவட்டத்தில் உள்ள அம்பிளாந்துறை, ஆரையம்பதி பகுதிகளில் இராணுவத்தினர் தமிழ்மக்கள்மீது

(4ம் பக்கம் பார்க்க)

## சார்க் மகாநாட்டின் பின்பே சுயேட்சைக் குழு நாடாளுமன்றம் செல்லும்?

(கொழும்பு)

கொழும்பில் நடைபெற இருக்கும், 'சார்க்' மகாநாடு முடிவடைந்தபின்பே, நாடாளு மன்றம் வரவிருக்கும் சுயேச்சை

(4ம் பக்கம் பார்க்க)

# ★ கிழக்கு மாகாணத்தில் இராணுவத்தினருக்கு புலிகள் பெரும் தலையிடியாக உள்ளனர்

## - பி. பி. ஸி. கணிப்பு -

(லண்டன்)

இலங்கையில் கிழக்கு மாகாணத்தில் விடுதலைப் புலிகள் இலங்கை இராணுவத்தினருக்கு பெரும் தலையிடியாகவே உள்ளனர். கிழக்கு மாகாணத்தின் பல பகுதிகளிலும் விடுதலைப் புலிகள் இலங்கை இராணுவத்தினர் மீது எதிர்பாராத நேரங்களில் திடீர் திடீரென தாக்குதல்களை நடாத்தி அவர்களுக்கு ஒரு பிரச்னையையே கொடுத்து வருகின்றனர்.

இவ்வாறு பி. பி. ஸி. அதன் நேற்றைய இலங்கைக் கண்ணோட்டத்தில் தெரிவித்தது.

இலங்கையின் வடபகுதியில் பெருமளவில் இலங்கை இராணுவத்தினர் குவிக்கப்படுகின்றனரென்றும், இராணுவம் அதன் நிலைகளை விஸ்தரிக்கின்றது என்று கூறப்பட்டுவந்த போதிலும், கிழக்குமாகாணத்தைப் பொறுத்தவரையில் விடுதலைப்புலிகள் இலங்கை இராணுவத்தினருக்கு ஒரு பெரும் தலையிடியாகவே இருந்துவருகின்றனர்.

கிழக்கின் பல பகுதிகளிலும் புலிகள் இராணுவத்தினர் மீது திடீர்த்தாக்குதல்களை நடத்தி அவர்களுக்குப்பெரும் பிரச்னையைக் கொடுத்து வருவதாகவும் பி. பி. ஸி. அதன் கண்ணோட்டத்தில் தெரிவித்தது.

## சார்க் உச்சி மகாநாடு: கட்டாயம் பங்குபற்றுமாறு இந். பிரதமருக்கு அழைப்பு

(கொழும்பு)

'சார்க்' உச்சி மாநாட்டில் இந்தியா கட்டாயம் பங்கு பற்றவேண்டும் எனக் கோரி, இலங்கை ஜனாதிபதி திரு. பிரேமதாஸா இந்தியப் பிரதமருக்கு அவசரக் கடிதம்

(4-ம் பக்கம் பார்க்க)

## தமிழ்நாட்டை புயல் தாக்கும் அபாயம்!

(சென்னை)

அடுத்த 24 மணிநேரத்திற்குள் தமிழ் நாட்டை கடுமையான புயல் தாக்கக்கூடுமென எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

மணிக்கு 60 முதல் 65 கி.மீ. வேகத்தில் இந்தப்புயல் தமிழ் நாட்டை தாக்கக்கூடுமென தெரிவிக்கப்பட்டது.

நாகபட்டினத்திற்குகிழக்கே 200 கிலோ மீற்றர் தூரத்தில் இந்தப் புயல் மையம் கொண்டுள்ளது.

இது தீவிரமடைந்து தமிழ் நாட்டின் கரையோரப்பகுதிகளான சென்னை, நாகபட்டி

(4-ம் பக்கம் பார்க்க)

## பவன அமுக்கம்

(கொழும்பு)

முல்லைத்தீவுக்கு வடகிழக்கே சுமார் 250 கிலோ மீற்றர் தொலைவில் தென்மேற்கு வங்காளவிரிகுடாவில் பவன அமுக்கம் ஏற்பட்டுள்ளதாக வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதுமேலும் தீவிரமடைந்து

(2ம் பக்கம் பார்க்க)

## தொண்டர் நிறுவனங்கள் மூலம் பொருள்கள்

(கொழும்பு)

யாழ்ப்பாணத்திற்குப் பொருள்களை அனுப்ப, தொண்டர் நிறுவனங்கள் ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

(2-ம் பக்கம் பார்க்க)

## வடக்கிலிருந்து கிழக்குக்கு மேலதிகபடை அனுப்பிவைப்பு

(கொழும்பு)

வடக்கின் சில பகுதிகளிலிருந்து கிழக்கு மாகாணத்திற்கு மேலதிக படைகள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக பாதுகாப்புவட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

கிழக்கில் புலிகள் உக்கிரமான தாக்குதல்களை மேற்கொண்டு வருவதையடுத்தே வடபகுதியிலிருந்து கிழக்குக்கு மேலதிகமாக படைகள் அனுப்

(4-ம் பக்கம் பார்க்க)

## அம்பாறையில் ராணுவ நடவடிக்கை

(கொழும்பு)

அம்பாறை மாவட்டத்தில் இராணுவ நடவடிக்கைகள் ஆரம்பமாகியுள்ளதாகக் கூறப்படுகிறது.

தொப்பிக்கல் காட்டுப்பகுதியில் விடுதலைப் புலிகளைத் தேடி தேடுதல் வேட்டையில் பெருமளவில் இராணுவத்தினர் ஈடுபட்டுள்ளதாகத்தெரிவிக்கப்படுகிறது. (மா)

## உணவுப் பொருள் விநியோகம் அரசாங்க அதிபர் அறிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்துக்குத் தரைமார்க்கமாக உணவுப்பொருள்கள் கொண்டுவருவதில் தாமதம் ஏற்பட்டுள்ளதால், நாம் புதிதாக மேற்கொண்டுள்ள உணவு விநியோகத்திலுள்

(4ம் பக்கம் பார்க்க)

## தாண்டிக்குளம் பாதையால் மக்கள் செல்ல அனுமதி

(வவுனியா)

வவுனியா தாண்டிக்குளம் நேர்ப்பாதையில் மக்கள் செல்ல நேற்று முன்தினம் முதல் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

கடந்த ஒரு வருடமாக இந்த பாதையினூடான போதுமக்

(4ம் பக்கம் பார்க்க)

## வெலிகந்தை அதிரடி பெண்போராளிகளின் முதலாவது தாக்குதல்

(யாழ்ப்பாணம்)

கிழக்கு மாகாணத்தில் விடுதலைப்புலிகள் இயக்க மகளிர் படையினர் முதல் தடவையாக நடாத்திய அதிரடித் தாக்குதலில் 14 இராணுவத்தினர் கொல்லப்பட்டதுடன், பெருமளவு ஆயுதங்களும் கைப்பற்றப்பட்டன.

நேற்று முன்தினம் கல் விச்சை வடமுனை இராணுவ முகாமிலிருந்து வெலிகந்தை இராணுவ முகாமுக்கு சேர்ந்து சென்ற இராணுவ அணிமீது புலிகளின் மகளிர் படையினர் நடாத்திய திடீர் அதிரடித்தாக்குதலில் 14 இராணுவத்தினர் கொல்லப்பட்ட

(4-ம் பக்கம் பார்க்க)

## தேடுதல் வேட்டை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள வடமுனைக்கும் பொலநறுவை மாவட்டத்திலுள்ள வெலிகந்தை பகுதிக்கும்

(4-ம் பக்கம் பார்க்க)

# புலிகளுக்கு எதிராக போரிட தமிழ், முஸ்லிம் படைப்பிரிவு

## - அபூபக்கர் கோருகிறார் -

(கொழும்பு)

விடுதலைப் புலிகளுக்கு எதிராக யுத்தம்புரிய தமிழ் முஸ்லிம் படைப்பிரிவை அமைக்குமாறு முஸ்லிம் காங்கிரஸின் வவுனியா மாவட்ட எம். பி. யும் அபூபக்கர் பாராளுமன்றத்தில் கேட்டுள்ளார்.

இந்த நடவடிக்கையில் ஈடுபட தமிழர்களுக்கு 'வலம்புரி' என்ற இராணுவப் பிரிவை முஸ்லிம் மக்களுக்கு 'ஜகத்' என்ற தனியான இராணுவப் பிரிவையும் அமைக்குமாறு இவர் கேட்டுள்ளார்.

இலங்கைப்பிரச்சினையில் இவ்வாறான ஆலோசனைகளை முஸ்லிம் காங்கிரஸ் கடந்த பல வருடங்களாகக் கூறிவருவதும் இங்கு குறிப்பிடத்தக்கது. (சி)

## வரி விளம்பரம்

### மீண்டும் சனிமாற்றம்

(28-10-91) சனி மாற்றம் வாக்கியப்படி ரூபா 7/-எல்லா ராசிகளின் பலன்கள் எங்கும் விற்பனையாகின்றன சோபிதா யாழ்ப்பாணம். (சி-553)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
இலங்கை
கலை/வர்த்தகம்
முகாமைத்துவம்
இராமநாதன்
நுண்கலைப்பிரிவு

### கல்வி ஆண்டு 1990/91

மேற்படி பயிற்சி நெறிகளிலுள்ள 1ம், 2ம், 3ம், 4ம் வருட மாணவர்களுக்கான புதிய கல்வி ஆண்டு 4-11-91 ஆரம்பமாகும்.

பதிவாளர்

பரீட்சைக் கிளை,
யாழ். பல்கலைக்கழகம்.
(சி-1680)

## கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

திவக அகதிகளுக்கு வழங்கப்பட்டுவரும் இரண்டுவார இலவச நிவாரண உணவுப்பொருட்களை தொடர்ந்தும் வழங்கும்படி மேலிடத்திடம் யாழ். அரச அதிபர் தொடர்பு கொண்டுகேட்டுள்ளார். (56)

## செஞ்சிலுவைச் சங்க கிளைகளுக்கு 14 சைக்கிள்கள்

(யாழ்ப்பாணம்)

இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ்கிளையினர் உதவி அரச அதிபர் பிரிவிலுள்ள 14 செஞ்சிலுவைச்சங்க கிளைகள் நிர்வாகத்தினருக்கு 14 சைக்கிள்களை வழங்கியுள்ளனர்.

அவ்வப்பகுதி தேவைகளை கவனிக்கும் பொருட்டே சைக்கிள்கள் வழங்கப்பட்டுள்ளது. (56)

## ஜப்பானின் புதிய பிரதமர்

(டோக்கியோ)

ஜப்பானில் ஆளும் லிபரல் ஜனநாயகக் கட்சி, கிச்சி மியோசவை புதிய பிரதமராகத் தேர்ந்தெடுத்திருக்கிறது.

அக்கட்சியின் தலைமைப் பதவிக்கு இவர் தேர்ந்தெடுக்கப்பட்டார். அடுத்த மாதம் 5ம் திகதி இவர் ஜப்பானின் பிரதமராகப் பதவியேற்பார். (மா)

## ஆசிரியர் முகாமைத்துவ பயிற்சி நெறி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண பாடசாலைகளின் பாட இணைப்பாளர்களாக கடமையாற்றும் ஆசிரியர்களுக்கான முகாமைத்துவ பயிற்சிகள் யாழ்ப்பாண கல்வித்திணைக்கள முகாமைத்துவ பிரிவினரால் தற்போது நடத்தப்பட்டு வருகின்றன.

முகாமைத்துவ பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. என். தணிகாசலம்பிள்ளையால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ள இப் பயிற்சி நெறியினை யாழ்ப்பாண கல்விப் பணிப்பாளர் திரு: இ. சுந்தரலிங்கம் இம் மாதம் 21-ம் திகதி ஆரம்பித்து வைத்தார்.

நவம்பர்மாதம் 20-ந் திகதி வரை தொடர்ச்சியாக, ஒவ்வொரு பாட இணைப்பாளர்களுக்கும் பயிற்சிகள் வழங்கப்படவுள்ளன.

இப்பயிற்சிகளில் கலந்து கொள்ளுமாறு 1 ஏ பி. 1சி. மகாவித்தியாலய தரத்திலான பாடசாலை பாட இணைப்பாளர்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. (109)

## இடமாற்றம்

(ஊர்காவற்றுறை)

யாழ் முனைச்சந்தியிலிருந்த யாழ்நகர் கிழக்கு கிராமசேவகர் அலுவலகம் மாட்டின் வீதிக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளது. கிராமசேவையாளராக திருமதி ம. மகேஸ்வரன் கடமையாற்றி வருகின்றார். (59)

### ஐரோப்பாவிலிருந்து

(1ம் பக்கத் தொடர்ச்சி)

அதிகரிக்க இலங்கை அரசு முயல்வதாக பி. பி. ஸி. தெரிவித்தது.

இவற்றை முறியடிக்க, விடுதலைப் புலிகள் மரபுவழிப் போரையும், கரந்தடிப் போரையும் மேற்கொள்ளலாம் என்றும் பி. பி. ஸி. தெரிவித்தது. (இ)

## தாதி உதவியாளர் பயிற்சி

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் சகல உதவி அரச அதிபர் பிரிவிலுள்ள செஞ்சிலுவைச்சங்க கிளைப்பகுதியிலிருந்து தாதி உதவியாளர் பயிற்சிநெறிக்கு இரு ஆண்களும், ஒரு பெண்ணும் தெரிவுசெய்யப்பட்டு பயிற்சிவழங்கப்படவுள்ளது

அவ்வப்பகுதியில் சுகாதாரப் பணியில் இவர்கள் ஈடுபடுத்தப்படவுள்ளனர். (56)

## இடம்பெயர்ந்த 432 குடும்பங்களுக்கு 2000 சாப்பாட்டுப்பார்சல்கள்

(கொழும்புத்துறை)

யாழ். கனகத்தினம் மத்திய மகாவித்தியாலயத்தில் தஞ்சம் புகுந்துள்ள தீவுப்பகுதிகளைச் சேர்ந்த 452 குடும்பங்களுக்கு சிறுவர் பாதுகாப்பு நிலையம், நெடபாஸ், தமிழர் புனர்வாழ்வுக் கழகம் ஆகியன ஒன்றிணைந்து இடம்பெயர்ந்த மக்களை பராமரித்து வருகின்றனர்.

இப்பாடசாலையில் தங்கியுள்ள இடம்பெயர்ந்த மக்களின் நலன்களைத் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினர் மேற்பார்வையிலும், தமிழீழ விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியினரின் அனுசரணையுடனும் கவனிக்கப்பட்டு வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த செவ்வாய்க்கிழமை தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி இன்ரறக்ட் கழகத்தினர் இங்குள்ள மக்களுக்கு 8000 சாப்பாட்டுப் பார்சல்களை அன்பளிப்பாக வழங்கினர். (154)

## வியாபாரம்பெருக விளம்பரம் செய்க

## கலிபர்தாக்குதல் 2 வீடுகள்சேதம்

(சித்தன்கேணி)

கலைநகர் சித்தன்கேணியிலுள்ள இரண்டு வீடுகளின் கூரை, பன்னாலைக் காரைநகர் வளைந்தலைச் சந்தியிலுள்ள இராணுவத்தினர் மேற்கொண்ட கலிபர் தாக்குதலினால் சேதமடைந்துள்ளது.

சேதமடைந்த வீட்டு உரிமையாளர்கள் அப்பகுதி கிராமசேவை அலுவலரிடம் முறைப்பாடு செய்துள்ளனர். (137)

## இராசி பலன்

29-10-1991
செவ்வாய்க்கிழமை
(தமிழுக்கு ஐப்பசி 12)

ஷஷ்டி காலை 6-44 வரை. ஸப்தமி பி. இ: 4-22 வரை. புனர்பூசம் நள்ளிரவு 11-52 வரை. சித்தயோகம். இராகு காலம் மாலை 3-03 முதல் 4-33 வரை. சுபநேரம் காலை 10-33 முதல் 12-03 வரை.

மேடம்: குடும்ப கலகலப்பு, நண்பர் உதவி, புதிய முயற்சி

இடபம்: இனசனப்பகை, ஏமாற்றம், கைப்பொருள் இழப்பு.

மிதுனம்: தொழில்மேன்மை பெரியோர் உதவி, மகிழ்ச்சி.

கடகம்: கண்ணியம் தவறல். பயண அலைச்சல், அவதூறு.

சிங்கம்: தெய்வீக செலவு, குடும்ப உறவு. காரியசித்தி.

கன்னி: குடும்ப ஆதரவு, மறைவான அன்பு, வரவு.

துலாம்: தொழில் தகராறு, குடும்ப மோதல், மனச்சுமை.

விருச்சிகம்: வேண்டாத தொல்லை, கடன் பகை, அமைதியின்மை.

தனுசு: வழித்தடங்கல், புதிய உறவு, குடும்ப நன்மை.

மகரம்: சகோதர உதவி, சுபகாரிய நிகழ்வு, புகழ்.

கும்பம்: தனிமை மடைதல், அவசர முடிவு, மயக்கம்.

மீனம்: குடும்ப துன்பம், காரிய அலைச்சல், அகால போசனம்.

ஜோஸ்யர்

## யாழ். ஆஸ்பத்திரியில் நோயின் கொடுமையால் உயிரை மாய்த்த நோயாளி

(யாழ்ப்பாணம்)

யாழ். வைத்தியசாலையிலுள்ள சத்திரசிகிச்சை விடுதி (30-ம் வார்ட்)டில் கடந்த 26-ந் திகதி இரவு நோயின் கொடுமை தாங்காத நோயாளி ஒருவர் உயிரை மாய்த்துக்கொண்டார்.

கட்டிலருகில் பொருத்தப்பட்டிருந்த சேர்ட்டின் கம்பியில் தான் உடுத்திருந்தசாரத்தின் கரையினை கிழித்து கயிறு போல் திரித்து தனது கழுத்தில் சுருக்கிட்டுக்கொண்டார் என்று தெரிவிக்கப்படுகிறது.

விசுவமடுவில் வசிக்கும் ஐயாசாமி வேலன் (57 வயது) என்ற நோயாளியே இவ்வாறு உயிரை மாய்த்துக் கொண்டதாகக் கூறப்படுகிறது. (56)

### தொண்டர்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

யாழ்ப்பாணத்திற்கு இத் தொண்டர் நிறுவனங்கள் மூலம் எவரும் பொருள்களை அனுப்பலாம் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

சில தொண்டர் நிறுவனங்கள் மேற்கொண்ட முயற்சிகளை அடுத்தே, இந்த ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (சி)

### பவன அழுக்கம்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

வடமேற்கு திசையில் மேற்கு திசை நோக்கி நகருமெனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

இதன் தாக்கம் காரணமாக அடுத்த 24 மணித்தியாலங்களில் நாட்டின் அநேகமான பகுதிகளில் கடற்கரையோர பிரதேசங்களிலும் இடையிடையே ஓரளவு கடும்காற்றுடன் கூடியமழை பெய்யுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தக் காலப் பகுதியில் கடலுக்கு மீன்பிடிக்க செல்ல வேண்டாமென்று மீனவர்களுக்கு ஆலோசனை கூறப்பட்டுள்ளது. (மா)


## தேவை

யாழ். நகரிலுள்ள பிரபல்யமான இந்துக்கோவிலுக்கு கீழ்குறிப்பிட்டுள்ள ஆட்கள் தேவை

1. குருக்கள்
2. உதவி ஐயர்மார், மடப்பள்ளி ஐயர்.
3. பாதுகாப்பு சேவையாளர்

சுயவிபரங்களுடன் விண்ணப்பிக்கவும்.

முடிவுத்திகதி:- 5-11-91

சம்பளம்;- பேசித்தீர்க்கப்படும்.

தொடர்பு:- விளம்பர இல. எ-1679
மே/பா ஈழநாடு, யாழ்ப்பாணம்.

(எ-1679)

## போத்தல்கள் தேவை

பின்வரும் விலைகளில் எம்மால் கொள்வனவு செய்யப்படும்.

| | |
|---|---|
| ஜாம் போத்தல்கள் | ரூபா 5-00 |
| ஜாம் போத்தல்கள் (சிறியது) | ரூபா 2-50 |
| விவா, ஹோர்லிக்ஸ் (400g. மூடியுடன்) | ரூபா 5-00 |

Taste Line Industries (pvt) Ltd
ரேஸ்ட் லைன் இன்டஸ்றீஸ்
14, சீனியர் ஒழுங்கை, யாழ்ப்பாணம்.
(எ-1624)

## தமிழீழ காவல்துறை

ஆண் / பெண் காவலர்களுக்கான

### வெற்றிடங்கள்

வயதெல்லை: 18 — 30 வருடங்கள்
கல்வித்தகமை: க. பொ. த. (சா/த) தமிழ் உட்பட 6 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்
உயரம்: 5' 6''

விண்ணப்பங்கள் சொந்தக் கையெழுத்தில் எழுதப்பட்டு நேரில் ஒப்படைக்கவும்.

விண்ணப்ப முடிவுத்திகதி: 02 - 11 - 91.

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி

தமிழீழ காவல்துறை செயலகம்,
நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

பொறுப்பாளர்
தமிழீழ காவல் துறை.

(ஏ-1681)

# மண்ணின் இயற்கைச் செழிப்பைப் பாதுகாத்தல்

திருமதி ஜெயந்தி சிதம்பரநாதன்

இன்றைய காலகட்டத்தில் இரசாயனவளமாக்கித்தட்டுப்பாடு காணப்படுவதனாலும், விவசாயிகள் தொடர்ந்தும் ஒரே நிலத்தில் பயிரிடவேண்டி இருப்பதனாலும் மண்ணின் இயற்கைச் செழிப்பு படிப்படியாக குறைந்து கொண்டு செல்கின்றது.

இங்ஙனம் எமது மண்வளம் குறைந்து கொண்டு செல்லும்போது விவசாயிகளுக்குக் கிடைக்கும் விளைவும் வீழ்ச்சியடைந்து செல்லும் ஆபத்தான நிலை ஏற்படுகின்றது. எனவே இவ் ஆபத்தானநிலையில் இருந்து விலகி மண்வளத்தையும் பாதுகாக்க பல இயற்கையான செயல்முறைகளை எமது விவசாயிகள் கையாள வேண்டியுள்ளது. அவையாவன: மண்ணைக் கொத்துதல், பத்திரக் கலவை இடல், பசுந்தாற்பசளைகள் இடுதல், சுழற்சி முறைப் பயிர்ச்செய்கை, கலப்பு வேளாண்மை, தரிசாக்கல் போன்ற செயல்முறைகளைக் கையாண்டு மண்ணின் இயற்கைச் செழிப்பை பாதுகாக்கலாம். இச்செயல் முறைகள் ஒவ்வொன்றையும் தனித்தனியே எடுத்துக்கொள்வோம்:

## மண்ணைக் கொத்துதல்

பயிர்செய்து விளைவைப் பெற்றபின் தரிசாக உள்ள நிலத்தின்மேல் மண்ணைக் கொத்தும்போது மண்ணின் காற்றோட்டம் கூட்டப்படுகின்றது. இத்தன்மை மண்ணின் நுண்ணங்கித் தொழிற்பாட்டினைக் கூட்டி மண்ணின் கனிப்பொருள் ஆக்கத்தை கூட்டுகின்றது. அத்துடன் மேல்மண்ணைக் கொத்தும்போது மண்ணின் தொடர்ச்சியான மயிர்த்துளைத் தன்மை அறுக்கப்படுகின்றது. இதனால் மண்ணீர் ஆவியாக வெளியேறும் தன்மை குறைக்கப்பட்டு மண்வளம் பாதுகாக்கப்படுகின்றது.

## பத்திரக்கலவை இடுதல்

தரிசாக உள்ள நிலத்தின் மேல் கடதாசி, பனையோலை, வைக்கோல் போன்ற பொருட்களை பத்திரக்கலவையாக இடுவதனால் மண்ணீர் ஆவியாதல் தடைசெய்யப்படுவதுடன் களைகளும் கட்டுப்படுத்தப்படுகின்றது. இங்ஙனம் களைகள் அழிக்கப்படுவதனாலும் மண்ணின் இயற்கைச் செழிப்பு பாதுகாக்கப்படுகின்றது.

## பசுந்தாற்பசளை இடல்

பூவரசு, சீமைக்கிளுவை, சணல் போன்ற இயற்கையான பசுந்தாற்பசளைகளை பயிர் நடுவதற்கு முன் நிலம் பண்படுத்தும்போது அடிக்கட்டுப் பசளையாக இடுவதன் மூலமும் மண்ணின் கனிப்பொருள் ஆக்கத்தைக் கூட்டி மண் வளத்தைக் கூட்டலாம்.

## சுழற்சி முறைப் பயிர்ச்செய்கை

ஒரே நிலத்தில் தொடர்ச்சியாக ஒரேவகையினைப் பயிரிடாது சுழற்சியான முறையில் வேறுபட்ட வேர் ஆழத்தைக் கொண்ட பயிர்களைப் பயிரிடுவதே சுழற்சி முறைப் பயிர்ச்செய்கையாகும். இம்முறையினால் வேறுபட்ட மட்டத்திலுள்ள போசணைப்பொருட்கள் எல்லாம் தாவரத்தில் உறிஞ்சப்படும். அத்துடன் இச்சுழற்சியில் அவரை இனத்தைச் சேர்ந்த ஓர் தாவரம் கட்டாயமாக பயிரிடப்படுவதனால் அத்தாவரத்தின் வேரிலுள்ள ஒருவகை பற்றீரியாவினால் வளிமண்டல நைதரசன் மண்ணில் நைதிரேட்டாக பதிக்கப்படுகின்றது. இதனால் மண்வளம் அதிகரிக்கின்றது.

## கலப்பு வேளாண்மை

அதாவது ஓர் நிலத்தில் ஒரு பகுதியில் விலங்கு வளர்ப்பும் மறுபகுதியில் பயிர்ச்செய்கையும் மேற்கொள்வதே கலப்பு வேளாண்மை எனப்படும். இங்ஙனம் ஒருபகுதியில் விலங்கு வளர்ப்பு மேற்கொள்வதனால் அந்நிலத்தில் விலங்குகளின் மல, சலம் சேர்க்கப்படுவதனால் அந்நிலம் நைதரசன் கொண்ட வளமான மண்ணாக மாற்றப்படுகின்றது. இச்செயல்முறையை மாறிமாறிச் செய்யும்போது மண்முழுவதும் வளமான மண்ணாக மாற்றப்படுகின்றது.

## தரிசாக்கல்

நிலத்தை தொடர்ந்தும் பயிர்ச்செய்கைக்கு ஈடுபடுத்தாது சிலகாலம் வெறுமையாக ஆறவிடுவதே தரிசாக்கல் எனப்படும். இங்ஙனம் செய்யும்போது மண்ணின் கனிப்பொருள் ஆக்கம் கூட்டப்பட்டு மண்வளம் பாதுகாக்கப்படுகின்றது.

இங்ஙனம் பல வழிமுறைகளை எமது பசுமைப்புரட்சியாளர்கள் ஆகிய விவசாயிகள் கைக்கொள்வதனால் எமது இயற்கைச் செல்வமாகிய மண்ணின் இயற்கைச் செழிப்பை அழியாது பாதுகாத்து உச்ச விளைவைப் பெறலாம்.

---

வலிவடக்கில்

# பொதுஇடங்களில் பதுங்குகுழிகள்

(காங்கேசன்துறை)

வலி வடக்கில் வீடுகளிலும் பொது இடங்களிலும் பதுங்கு குழிகள் அமைக்கும் வேலைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

வலி. வடக்கில் இராணுவ ஆக்கிரமிப்புக்குட்பட்ட பிரதேசத்திற்கு அண்மையில் வசிப்பவர்கள் தமது வீடுகளில் பதுங்கு குழிகளை அமைப்பதிலும், சீர்செய்வதிலும் ஈடுபட்டுள்ளனர்.

பொதுஇடங்களிலும்பதுங்கு குழிகள் அமைக்கப்படுகின்றன.

வலி. வடக்கில் நிலைகொண்டுள்ள படையினர் கடந்த சில தினங்களாக ஷெல் தாக்குதல், துப்பாக்கிப் பிரயோகம் ஆகியவற்றை அடிக்கடி நடத்திவருவதும் குறிப்பிடத்தக்கது. (86)

---

வலிவடக்கில்

# உலர் உணவு அட்டைகள் மீளாய்வு செய்ய ஏற்பாடு

(காங்கேசன்துறை)

வலிவடக்குப் பகுதியில் உலர் உணவு விநியோகத்திற்கான 'உ' அட்டைகளை மீளாய்வு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

வலி வடக்கு பகுதியிலிருந்து இடம்பெயர்ந்த 1500 ரூபாவுக்கு மேற்பட்ட வருமானம் உடையவர்களுக்கு 'உ' அட்டைகள் வழங்கப்பட்டு அவர்களுக்கு பணத்திற்கு உலர் உணவுப் பொருட்கள் வழங்கப்பட்டன.

இந்த 'உ' அட்டைகளை மீளாய்வு செய்து புதிய அட்டைகளை வைத்திருப்போர் தத்தமது கிராமசேவை அலுவலர்களுடன் தொடர்பு கொள்ளுமாறும் கோரப்பட்டுள்ளது. (86)

---

# மழையினால் வியாபாரிகள் தவிப்பு

(யாழ்ப்பாணம்)

வவுனியா, முல்லைத்தீவு, கிளிநொச்சிப் பகுதிக்குச் சென்ற யாழ்ப்பாண வியாபாரிகள் தொடர்ந்து வரமுடியாதநிலையில் அவ்வப்பகுதிகளில் இருக்கின்றனர்.

தற்போது பெய்துவரும் மழையினால் பாதைகளில் பெருவெள்ளம் ஏற்பட்டிருப்பதால் அப்பகுதி போக்குவரத்து முற்றாக ஸ்தம்பிதமடைந்துள்ளது.

வேறு பாதைகளூடாக வியாபாரிகள் வரமுடியாத நிலையில் அங்கு தவிப்பதாக செய்திகள் தெரிவிக்கின்றன. (86)

---

★ மிருக உணவை ஏழைகளுக்கு அனுப்பி

# இலங்கை மீது பழிபோட்ட அமெரிக்க அதிகாரி சிறையில்

(லண்டன்)

ஆபிரிக்காவில் பட்டினியால் வாடும் ஏழை மக்களுக்கு, மிருகங்களுக்கு கொடுக்கும் பால்மா வகைகளை அனுப்பிய அமெரிக்கக் கப்பல் கம்பனி முகாமையாளர் ஒருவர் அப்பழியை இலங்கைமீது சுமத்த முற்பட்டபோது கைது செய்யப்பட்டார்.

மிருகங்களுக்கு கொடுக்கும் மலிவான பால்மா உணவை பல தொன் கணக்கில் ஆபிரிக்காவுக்கு அனுப்பி வைத்த மேற்படி கம்பெனியின் முகாமையாளர், அப்பழியை இலங்கைமீது சுமத்த முற்பட்டதாகவும் விசாரணையில் மேற்படி சம்பவத்துக்கும் இலங்கைக்கும் எதுவித தொடர்பும் இல்லை என்பது நிரூபிக்கப்பட்டதின் ஆல் அக்கப்பல் கம்பெனி முகாமையாளர் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளார். தற்போது (வி)

---

# நில நடுக்கத்தால் மீண்டும் உத்தரகாசி குலுங்கியது

## - மக்கள் வீடுகளை விட்டு ஓட்டம் -

(புதுடில்லி)

நிலநடுக்கத்தால் மிகமோசமாக பாதிக்கப்பட்டுள்ள உத்தரப் பிரதேசத்தின் உத்தரகாசியில் நேற்று முன்தினம் மீண்டுமொருமுறை ஏற்பட்ட நிலநடுக்கத்தால் அப்பகுதியே குலுங்கியது.

மாலை நேரத்தில் ஏற்பட்ட இந்த நிலநடுக்கத்தையடுத்து பீதியடைந்த ஆயிரக்கணக்கான மக்கள் வீடுகளைவிட்டு வெளியிடங்களை நோக்கி தப்பி ஓடினார்கள்.

இது மூன்றாவது தடவை ஏற்பட்ட நில நடுக்கம் என்றும் தெரிவிக்கப்படுகிறது. உத்தரகாசியில் மக்கள் இரவு நேரங்களில் திறந்த வெளிகளிலேயே இருக்கிறார்களாம். (வி)

---

★ காஷ்மீரில்

# இந்திய காவலரண் மீது பாக். படைதிடீர் தாக்குதல்

## - இரு தரப்பிலும் பலர் பலி -

(புதுடில்லி)

காஷ்மீரில் இந்திய காவலரண் ஒன்றின்மீது பாகிஸ்தான் படைகள்மேற்கொண்ட திடீர் தாக்குதலில் இரு தரப்பிலும் படையினர் கொல்லப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்தியக் காவலரண் மீதுகனரக மோட்டார்களையும், துப்பாக்கிகளையும்கொண்டு பகிஸ்தான் படைகள் மேற்கொண்ட தாக்குதலில் இந்தியத் தரப்பில் 4 படையினரும், பாகிஸ்தானிய தரப்பில் 6 படையினரும் கொல்லப்பட்டுள்ளனர்.

பாகிஸ்தானிய படைகளின் இந்த முயற்சி இந்தியப் படைகளால் முறியடிக்கப்பட்டதாகவும், இந்த மாதம் இல்லாமல் பாதியில் இரு தரப்பிடையேயும் மேற்கொள்ளப்பட்ட உடன்பாட்டை மீறி பாகிஸ்தான் நடத்துவதாகவும், இந்திய பாதுகாப்பு அமைச்சர் திரு. சரத்பவார் தெரிவித்துள்ளார். (சி)

---

# 35,000 ஆசிரியர் உடனடியாக நியமனம்

(கொழும்பு)

நாடுமுழுவதிலும் உடனடியாக 35,000 ஆசிரியர்கள் நியமிக்கப்படவுள்ளதாக அமைச்சர் ஹமீத் தெரிவித்துள்ளார். இதற்கான ஏற்பாடுகள் தற்போது துரிதமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

ஆரம்ப ஆசிரியர்கள், பயிலுநர் ஆசிரியர்கள், கணித, விஞ்ஞான ஆசிரியர்களே இதில் தெரிவு செய்யப்படவுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

இதேவேளை மேற்படி 35,000 ஆசிரியர்களைவிட பட்டதாரி ஆசிரியர்களும் சேர்த்துக் கொள்ளப்படவுள்ளனர். இதற்கான விண்ணப்பங்கள் கோரப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (சி)

---

# நியாய விலையில் பொருட்கள் விற்பனை

(காங்கேசன்துறை)

திடீர் சூழ்நிலையால் அத்தியாவசியப் பொருட்கள் விலை ஏறும் என அச்சமடைந்த பொதுமக்கள் அவ்வாறு விலையேறுமையால் நிம்மதியடைந்துள்ளனர்.

யாழ். குடாநாட்டில் திடீரென ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலையில் பொருட்களை பதுக்கி வைத்து கொள்ளை லாபம் அடிப்போர் அவற்றின் விலைகளை அதிகரிக்கத் திட்டமிட்டனர்.

ஆனால் புதிய நடவடிக்கைகளைத் தொடர்ந்து விலை அதிகரிப்பு சாத்தியப்படாமையால் நியாய விலையில் பொருட்கள் விற்பனை செய்யப்படுகின்றன. (86)

---

# இருப்பு விபரங்களை கையளித்தனர்

(சித்தன்கேணி)

சங்கானை உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்குட்பட்ட வியாபாரிகள் தமது கைவசம் உள்ள அத்தியாவசிய பொருட்களின் இருப்பு விபரங்களை உதவி அரசாங்க அதிபர் திரு. து. வைத்திலிங்கத்திடம் கையளித்தனர்.

சங்கானை, சுழிபுரம், வட்டுக்கோட்டை ஆகிய இடங்களிலுள்ள மொத்த வியாபாரிகள், சில்லறை வியாபாரிகள் அனைவரும் தங்கள் கைவசமுள்ள அத்தியாவசிய பொருட்களின் இருப்பு விபரங்களை உதவி அரசாங்க அதிபரிடம் கையளித்தனர். (157)

## யாழ். மாவட்டத்தில்
# 49 ஆயிரத்து 549 குடும்பங்கள்
# அகதிகளாகியுள்ளன

(யாழ்ப்பாணம்)
யாழ். மாவட்டத்தில் 49 ஆயிரத்து 549 குடும்பங்கள் தற்போது அகதிகளாக தங்கியுள்ளார்கள்.

யாழ். மாவட்டத்திலுள்ள 8 உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளிலிருந்து 87 ஆயிரத்து 412 குடும்பங்களும், வெளிமாவட்டங்களிலிருந்து 6 ஆயிரத்து 137 குடும்பங்களும் இடம்பெயர்ந்து தற்போது யாழ். மாவட்டத்தின் பல்வேறு இடங்களில் அகதிகளாக தங்கியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இராணுவநடவடிக்கை காரணமாக ஊர்காவற்றுறைப் பகுதியிலிருந்து 9 ஆயிரத்து 258 குடும்பங்களும் வேலணை பகுதியிலிருந்து 5 ஆயிரத்து 460 குடும்பங்களும் யாழ்ப்பாணத்திலிருந்து ஆயிரத்து 650 குடும்பங்களும், கோப்பாய் பகுதியிலிருந்து ஆயிரத்து 295 குடும்பங்களும் மருதங்கேணிப்பகுதியிலிருந்து ஆயிரத்து 971 குடும்பங்களும் சாவகச்சேரி பகுதியிலிருந்து 439 குடும்பங்களும் உடுவில் பகுதியிலிருந்து 2 ஆயிரத்து 791 குடும்பங்களும் தெல்லிப்பழை பகுதியிலிருந்து 14 ஆயிரத்து 548 குடும்பங்களும் தற்போது இடம் பெயர்ந்துள்ளனர். (வி)

### மாதாந்த உதவிப் பணம்

(சித்தன்கேணி)
சங்கானை உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்குட்பட்டவர்களுக்கு செப்டம்பர் மாதத்துக்கான பொதுசன மாதாந்த உதவிப்பணம் வழங்கப்படுகின்றது

செப்டம்பர் மாதத்துக்குரிய பொதுசன மாதாந்த உதவிப் பணம் அவ்வவ்பகுதி கிராம சேவை அலுவலர்களினால் கிராம சேவை அலுவலர் பணிமனைகளில் வைத்து வழங்கப்படுகின்றது. (137)

### சார்க் உச்சிமகாநாடு

(1ம் பக்கத் தொடர்ச்சி)
ஒன்றை அனுப்பிவைத்துள்ளார்.

'சார்க்' மாநாட்டில் இந்தியாவின் பங்களிப்பு அத்தியாவசியமானது. ஆரம்பம் முதல் முடிவு வரை கலந்துகொள்ளுமாறு திரு. பிரேமதாஸா இந்தியப் பிரதமரைக் கேட்டுள்ளார்.

கொழும்பில் நடைபெறவுள்ள இம்மாநாட்டில் இந்தியப் பிரதமர் கலந்துகொள்ளமாட்டார் எனப் பல பத்திரிகைகள் முன்னர் செய்திகள் வெளியிட்டதும் தெரிந்ததே. (சி)

### தாண்டிக்குளம்

(1ம் பக்கத் தொடர்ச்சி)
கள் செல்ல அனுமதிக்கப்படவில்லை.

நேற்றுமுன்தினம் அதிகளவு பொதுமக்கள் வடக்கிலிருந்து இந்த பாதையினூடாக பயணம் செய்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

சிறிலங்கா இராணுவ சோதனை முகாம் நொச்சிமோட்டையில் அமைக்கப்பட்டுள்ளதாகவும் கூறப்படுகிறது. (153)

### 'சார்க்' மகாநாட்டில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)
(சுரோஜ்) குழுவினருக்கு அழைப்புவிடுக்கப்படலாமென கொழும்பிலுள்ள அரசியல் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

யாழ். நகரிலிருந்து கொழும்புக்கு வரவிருக்கும் மேற்படி குழுவினர் தமக்கு தகுந்த பாதுகாப்பு வழங்கப்படுமென அரசு உறுதிமொழி அளித்த பின்பே தாம் கொழும்பு வருவது சாத்தியமாகும் என ஜனாதிபதிக்கு அறிவித்திருந்தனர்.

ஆனால் பாதுகாப்பு அமைச்சிடமிருந்து இதுவரை அவர்களுக்கு எதுவிதபதிலும் அனுப்பப்படவில்லையென்றும் அனேகமாக, அடுத்தமாதம் கொழும்பில் நடைபெறவிருக்கும் 'சார்க்' மகாநாடு, 'சார்க்' விளையாட்டுப் போட்டிகள் முடிவடைந்த பின்பே, இக்குழுவினருக்கு அரசிடமிருந்து அழைப்பு அனுப்பப்படலாமெனக் கூறப்படுகின்றது. (வி)

## பாக். போர் விமானம் விழுந்து நொருங்கியது

(இஸ்லாமாபாத்)
பாகிஸ்தானில் நேற்றுமுன்தினம் 'எவ்-16' ரக போர் விமானமொன்று விழ்ந்து நொருங்கியுள்ளது.

இஸ்லாமாபாத்திலிருந்து 50 கிலோ மீற்றர் தூரத்தில் இவ்விமானம் வீழ்ந்துநொருங்கியுள்ளது. எனினும் விமானி வெளியே குதித்துத் தப்பிவிட்டார்.

பாகிஸ்தானில் இதுவரை நான்கு 'எவ்-16' ரக போர் விமானங்கள் விபத்துகளில் சிக்கி நொருங்கியுள்ளன. (சி)

### வடக்கிலிருந்து

(1-ம் பக்கத் தொடர்ச்சி)
பப்பட்டுள்ளது.

கடந்த இரு வாரத்தில் கிழக்கில் 82 படையினர் உட்பட 88 பேர் கொல்லப்பட்டதுடன் 20 படையினர் வரை படுகாயமடைந்துமுள்ளனர். (சி)

### உணவுப் பொருள்

1-ம் பக்கத் தொடர்ச்சி)
பொதுமக்களுக்கும், வர்த்தகர்களுக்கும் ஏற்படும் அசௌகரியங்களைக் கவனத்தில் கொள்ளவேண்டும் என யாழ். அரச அதிபர் திரு. க. மாணிக்கவாசகர், பொதுமக்களுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது சம்பந்தமாக யாழ். அரச அதிபர் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

கடந்த இரு வாரங்களாகத் தரை வழியாக யாழ்ப்பாணத்திற்கு அனுப்பிய உணவுப் பொருள்களைக் கொண்டுவருவதில் ஏற்பட்ட தடை தொடர்ந்து இருப்பதன் காரணத்தினாலும், கப்பல் மூலம் பொருள்களைக் கொண்டுவருவதில் ஏற்பட்டுவரும் தாமதம் காரணமாகவும் மாவட்டத்தின் அத்தியாவசிய உணவுப் பொருள்களுக்குத் தட்டுப்பாடு ஏற்படும் சூழ்நிலை உருவாகின்றது.

இச்சூழ்நிலையில் கையிருப்பில் உள்ள உணவுப் பொருள்களைக் கட்டுப்பாடான முறையில் பகிர்ந்து விநியோகிப்பது அவசியமாகியுள்ளது.

இதற்காகப் பிரதேச ரீதியான பாவனையாளர் பாதுகாப்புக் குழுக்களும், கிராம ரீதியாகப் பாவனையாளர் பாதுகாப்புக் குழுக்களும் உருவாக்கப்பட்டு, அவ்வப் பிரதேசங்களில் உணவு விநியோகம் யாவருக்கும் ஒரே சீராக நடைபெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இச்சூழ்நிலையில் பொதுமக்களும், வர்த்தகர்களும் இதனால் ஏற்படும் சில அசௌகரியங்களைக் கவனத்திற்கொள்ளாது. யாழ். மாவட்டத்து மக்கள் நன்மைக்கான இத்திட்டத்திற்குப் பூரணஒத்துழைப்பு அளிக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன். (வி)

### தமிழ் மக்கள் மீது

(1-ம் பக்கத் தொடர்ச்சி)
கண்மூடித்தனமாக துப்பாக்கிப்பிரயோகம் செய்ததில் பலர் படுகாயமடைந்துள்ளனர்.

நேற்று முன்தினம் பகல் வெலியபோறதிவு இராணுவ முகாமிலிருந்து அம்பிலாந்துறைக்கு ரோந்து சென்ற இராணுவத்தினர் அங்கு கூட்டமாக நின்ற தமிழ் பொதுமக்கள் மீது துப்பாக்கிப்பிரயோகம் செய்துள்ளனர்.

இதேபோன்று ஆரையம்பதி பகுதியிலும் இராணுவத்தினர் மண்முனை காட்டுப் பகுதிகளை நோக்கி இடைவிடாது துப்பாக்கிப் பிரயோகம் செய்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது. (வி)

### தேடுதல்

(1ம் பக்கத் தொடர்ச்சி )
இடைப்பட்ட பகுதிகளில் நேற்று இராணுவத்தினர் விமானப்படையின் உதவியோடு தேடுதல் வேட்டைகளை நடத்தியதாக தெரிவிக்கப்படுகிறது.

நேற்றுமுன்தினம் வெலிகந்தைப் பகுதியில் விடுதலைப் புலிகள் நடத்திய திடீர் அதிரடித் தாக்குதலில் 14 படையினர்கொல்லப்பட்டது தெரிந்ததே. (மா)

### வெலிகந்தை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)
துடன் பலர் படுகாயமடைந்துள்ளனர்.

இத்தாக்குதலில் புலிகள் தரப்பில் 2-ம் லெப். நிலா (கிருஷ்ணபிள்ளை நிர்மலாதேவி குருமண்வெளி) வீரமரணமடைந்தார். இவருக்கு விடுதலைப்புலிகள் தமது வீரவணக்கத்தை தெரிவித்துள்ளனர்.

மேற்படி தாக்குதலின்போது இராணுவத்தினரிடம் இருந்து கைப்பற்றப்பட்ட ஆயுதங்களின் விபரம் வருமாறு:

ஏ. கே. எல். எம். ஜி. ரகத் துப்பாக்கி-2, இதற்குரிய ரவைக் கூடுகள்-2, ரவைத் தொடர்கள்-550, ரி-56ரகத் துப்பாக்கி-1, இதற்குரிய ரவைக் கூடுகள்-18, ரி-81ரகத் துப்பாக்கிகள்-7, இதற்குரிய ரவைக் கூடுகள்-28, ரி-56 இரண்டு ரகத் துப்பாக்கிகள்-4, 76 இரண்டு நடுத்தர ரவைகள்-1,333, 60 மில்லிமீட்டர் மோட்டார் எறிகணைகள்-12, ஜே. ஆர். கைக்குண்டுகள்-3, இராணுவப் பைகள்-13, தலைக்கவசங்கள்-4, ஏ. கே. ரவைக் கூடுகள்-12, வானொலித் தொடர்பு மின்கலம்-1. (வி)

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் கம்பனியாரால் யாழ்ப்பாணம் கே.கே.எஸ். வீதி 68-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1991-ம் ஆண்டு ஒக்ரோபர் 29ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது Registered as a News Paper at the General Post Office Sri Lanka
[illegible]

## 5 லட்சம் குழந்தைகள் எயிட்ஸ் நோயால் பாதிப்பு

(ஜெனிவா)
உலகெங்கும் 5 லட்சம் சிறுவர்கள் தற்போது எயிட்ஸ் நோயால் பீடிக்கப்பட்டுள்ளதாக, உலக சுகாதார ஸ்தாபனம் ஜெனிவாவில் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது.

இவ்வருடம் அக்டோபர் மாதம் 1-ம் திகதிவரை 163 நாடுகளைச் சேர்ந்த, 4 லட்சத்து 18 ஆயிரத்து 403 சிறுவர் மேற்படி நோயால் பீடிக்கப்பட்டுள்ளதாகவும், 46 ஆயிரத்து 600 சிறுவர்களுக்கு இந்த நோய் ஏற்படக்கூடிய அறிகுறிகள் தென்படுவதாகவும் உலக சுகாதார ஸ்தாபனத்தின் புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றன. (வி)

## யாழ். நகருடன் தொடர்பை ஏற்படுத்த முயன்றோர் கைது

(சென்னை)
யாழ்ப்பாணத்துடன் இரகசியத் தொடர்பை ஏற்படுத்த முயன்ற மூவர், திண்டுக்கல் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

வேளாங்கண்ணியில் இருந்து யாழ்ப்பாணத்திற்குப் பூரணமான தொலைத் தொடர்பை ஏற்படுத்த முயன்றனர் என்ற குற்றச்சாட்டின்பேரில் மூன்று விடுதலைப் புலிகள் ஆதரவாளர்கள் திண்டுக்கல்லில் கைதுசெய்யப்பட்டனர்.

சாலின், பி ரவிச்சந்திரன், மகேஷ் அல்லது சுசீந்திரன் என்பவர்களே கைதுசெய்யப்பட்டவர்களாம். (சி)

## பொன்னாலை கரைப்பகுதி நோக்கி
# பீரங்கித் தாக்குதல்

(யாழ்ப்பாணம்)
காரைநகர் கடற்பரப்பில் ரோந்து செல்லும் கடற்படையினர் பொன்னாலை திருவடிநிலை கடற்கரையோரப் பகுதிகளை நோக்கி நேற்று முன்தினமிரவு பீரங்கித் தாக்குதல்களை மேற்கொண்டனர்.

மாலை 7 மணியளவில் காரைநகர் கடற்படை முகாமிலிருந்து பொன்னாலைப்பகுதியைநோக்கி படையினர் ஷெல் தாக்குதலையும் மேற்கொண்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (56)

### தபாற்பொதிகள் அனுப்பி வைக்கப்படும்

(யாழ்ப்பாணம்)
யாழ். குடாநாட்டுத் தபாற் பொதிகள் இன்று செவ்வாய்க்கிழமை காலை யாழ். பிரதம தபாற்கந்தோரிலிருந்து பருத்தித்துறையில் தரித்து நிற்கும் குமாரி கப்பலுக்கு அனுப்பி வைக்கப்படுமென்று தெரிவிக்கப்படுகிறது. (56)

### தமிழ் நாட்டை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)
னம் ஆகிய பகுதிகளைக் கடுமையாகத் தாக்குமென எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (மா-வி)

★ இதோ! வெளிவந்து வேகமாக
விற்பனையாகிக் கொண்டிருக்கிறது !!

சீவம் இன்டஸ்றீஸாரின்

நவீன

# தீபாவளி

## வாழ்த்து மடல்கள்

விலை விபரம்

| | | |
|---|---|---|
| No. 1 கட்டிங் காட்100க்கு | | 1350 . 00 |
| No. 2 போட்காட் 100க்கு 10X7 | | 1250 . 00 |
| No. 2 பேப்பர்காட் 10X7 100 க்கு | | 600 . 00 |
| No. 3 கட்டிங் காட் | ,, | 750 . 00 |
| No. 4 போட் காட் 7X5 | ,, | 550 . 00 |
| No. 5 கட்டிங் காட் | ,, | 550 . 00 |
| No. 6 பெரிய இரு மடிப்பு | ,, | 550 . 00 |
| பெரிய போஸ் காட் | ,, | 250 . 00 |
| சிறிய போஸ் காட் | ,, | 110 . 00 |
| சுவாமி போஸ் காட் | ,, | 110 . 00 |

★ வாடிக்கையாளரின் கவனத்திற்கு: எமது ஸ்தாபனம் இராணுவ நடவடிக்கையினால் பாதிக்கப்பட்டுள்ளது. ஆதலினால் கீழ்க்கண்ட விலாசத்தில் இதேவிலையில் வாழ்த்து மடல்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

மக்மிலன் புத்தகசாலை

இல. 3, ஆஸ்பத்திரி வீதி,

யாழ்ப்பாணம்.

(கி- 5540)